# வரவேற்பிதழ்.

வல்லூறு வானிலே பறந்த நிலைமாறி விமானங் கண்டு உலகத்து எங்கோ ஓர் மூலையில் எழுங்குரலை மற்றோர் தொலை தூரத்தும் எட்டும் நிலைகண்டு சாகாடு வழி நிலங்கடந்த நிலை மாறி நாடு முழுவதும் நாளிலே காணும் துறைகண்டு "யாதும் ஊரே யாவருங் கேளிர்" என்ற புறநானூற்றடிகளின் உண்மை விளக்கமாக உலகத்து மக்களை அருகச் சேர்த்துள்ள பெருமை யுடைத்தாம் அறிவியற்கலை யீன்றெடுத்த அருந்தவப் புதல்வ, எந்தம் தாய்ச் சங்கமாம் பாரதி தமிழ்ச் சங்கத்தின் நிறுவனத் தலைவ திரு. கிருஷ்ணன் அவர்களே வருக! வருக! வருக! என்று வாழ்த்தொலித்து வரவேற்கின்றோம்.

அறிவியற்கலை வழி உலக அரங்கிலே அணுகுண்டுகளைக் கண்டகாலையும் அக்கலை ஆக்கவழி மன்னுதல் வேண்டும் எனும் பெற்றியொடு செயலாற்றும் நின் திறனைப் போற்றுதும் "ஒன்றே செய்தல் ஒன்றும் நன்றே செய்தல்" என்ற நெறிநின்று வங்கத்திலே வாழ்ந்தபோது வாழ்வாங்கு வாழ வடக்கத்திலேயே முதற் தமிழ்ச் சங்கமாம் இப்பாரதி தமிழ்ச் சங்கத்தினைத் தோற்றுவித்த பெருமையையும் வங்கம் நீங்கி தமிழகத்தினின்றும் இன்னும் தொலைசென்று டில்லி சேர்ந்த போதும் ஆண்டும் இன்று அவண் உள்ள தமிழ்ச் சங்கத்தின் தலைவகை இருந்து பணியாற்றுதல்; நின் தமிழ் நெஞ்சம் எவ்வாற்றினும் யாண்டும் "உலகமெலாம் தமிழ் மொழி பரவும் வகை செய்தல் வேண்டும்" என்று பாரதி விழைந்த வழிநிற்கும் நெறியெண்ணி மகிழ்கின்றோம்.

அறிவியற்கலைவழி நீவிர் பெறும் அருங்கருத்துக்களை நின் ஆய்வுத் திறனை அகிலமறியச் செய்திடுதற்கு ஆற்றல் துணை நிற்றல் வேண்டும் என்று வாழ்த்துகின்றோம்

அஞ்ஞானத்தை போக்கி மெய் ஞானத்தை வளர்க்கும் விஞ்ஞானி பல்லாண்டு வாழ நீராருங் கடலுடுத்த நிலமடந்தையை இறைஞ்சுகின்றோம்.

கல்கத்தா

26.1.57

தமிழ் மாணவர் மன்றம்

கல்கத்தா.

தமிழ் மாணவர் மன்றம்